# பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் (PMMSY)
# கடலில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பு

## கடலில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பு :

வணிக ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த மீன் குஞ்சுகளை மிதவை கூண்டுகளில் இட்டு வளர்ப்பதன் மூலம் அதிக லாபம் ஈட்ட முடியும். இவ்வாறு வளர்க்கப்படும் மீன்குஞ்சுகளுக்கு கடலில் கிடைக்கும் விலை குறைவான சிறிய ரக மீன்களான சாளை (அல்லது) செயற்கை தீவனங்களையோ உணவாக (8 – 10 மாதங்கள் வரை) அளித்து அறுவடைக்கு தயாராகும் வரை வளர்த்து விற்பனை செய்யலாம்.

இது கடற்கரையில் வாழும் மீனவர்களுக்கும் / தொழில் முனைவோருக்கும் வாழ்வாதாரத்தை பெருக்குவதற்கான கூடுதல் வழிமுறையாக விளங்குகின்றது.

## கடலில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பின் அனுகூலங்கள் :

- குறைந்த முதலீடு
- எளிய வளர்ப்பு முறை
- சுலபமான முறையில் அறுவடை
- அதிக லாபம்
- தரமான புரத உணவு கிடைத்தல்

## வளர்ப்பிற்கேற்ற மீனினங்கள் :

கடல்விரால் (கோபியா), சேவனிபாறை, கொடுவா மற்றும் சிங்கிறால்கள்.

## மிதவை கூண்டுகளின் அமைப்பு :

கடல் மிதவை கூண்டுகள் இரும்பு குழாய்கள் (GI) அல்லது அதிக அடர்த்தி கொண்ட பாலி எத்திலின் (HDPE) பிளாஸ்டிக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இக்கூண்டு 6 மீ விட்டமுடையது. இரும்பு கூண்டுகள் 2 – 3 ஆண்டுகளும், HDPE கூண்டுகள் 10 – 15 ஆண்டுகளும் ஆயுட்காலத்தை கொண்டிருக்கும். கூண்டுகள் மூன்று வலைப்பைகளை கொண்டுள்ளது. இதில் உட்புற வலைப்பையில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகிறது. இதன் கண்ணியின் அளவு மீன் குஞ்சுகளின் வளர்ச்சிக்கு ஏற்ப 20 மி.மி. முதல் 60 மி.மி. வரை பயன்படுத்தப்படுகிறது. வெளிப்புற வலைப்பை பாதுகாப்புக்காணதாகும், இதன் கண்ணி அளவு 60 – 80 மி.மி. வரை இருக்கும். இதை தவிர்த்து கூண்டின் மேற்பரப்பில் 80மி.மி. கண்ணி அளவு உடைய வலை பறவைகளிடமிருந்து மீன்களை பாதுகாக்கும் வலை ஆகும். பொதுவாக 5-6மீ ஆழமுள்ள கடற்பகுதிகளில் 90-100கிலோ எடையுள்ள நங்கூரம் மூலம் கூண்டுகள் நிலை நிறுத்தப்படுகிறது.

**மிதவை கூண்டு**



| கூண்டுகளில் வளர்ப்பதற்கு ஏற்ற மீனினங்கள் | 6 மீட்டர் அளவுள்ள கூண்டுகளில் இருப்பு செய்யும் எண்ணிக்கை மற்றும் அளவு | உணவு | வளர்ச்சி | மீன்களின் சந்தை விலை மற்றும் நிகர லாபம் |
|---|---|---|---|---|
| கடல் விரால் (கோபியா)  | 800 – 900 (25 – 30 கி) | விலை குறைவான மீன்கள் ( சாளை / செயற்கை தீவனங்கள்) | 4 – 6 கிலோ (8 மாதங்கள்) | ரூ. 300 – 350/– கிலோ<br>ரூ. 3 – 3.5 இலட்சம் |
| கொடுவா  | 1000 – 1500 (25 – 30 கி) | விலை குறைவான மீன்கள் ( சாளை / செயற்கை தீவனங்கள்) | 1 – 1.5 கிலோ (8 மாதங்கள்) | ரூ. 450 – 600/– கிலோ<br>ரூ. 2 – 2.5 இலட்சம் |
| சேவனி பாறை  | 2000 – 3000 (10–15 கி) | விலை குறைவான மீன்கள் ( சாளை / செயற்கை தீவனங்கள்) | 500 கிராம் (8 மாதங்கள்) | ரூ. 350 – 400/– கிலோ<br>ரூ. 2 – 2.5 இலட்சம் |
| சிங்கிறால்  | 1000 (50 – 60 கி) | மட்டிகள் / சாளை மீன்கள் | 150 – 200 கிராம் (3 மாதங்கள்) | ரூ. 1500 – 2000/– கிலோ<br>ரூ. 1.5 – 2.0 இலட்சம் |

## நிதியுதவி மற்றும் மானியம் வழங்குதல் தொடர்பான நடைமுறைகள் :

- பயனாளிகள் கூண்டினை நிறுவும் முன்னர் தமிழ்நாடு அரசின் மீன் வளத்துறையில் முன் அனுமதி பெற வேண்டும்.
- பயனாளிகள் தொழில்நுட்ப மற்றும் செலவினம் சார்ந்த திட்ட அறிக்கையினையும், மானியம் தவிர மீதமுள்ள தொகைக்கான வங்கிக்கடன் அல்லது நிதி ஆதாரம் சார்ந்த விபரங்களை அளிக்க வேண்டும்.
- ஒரு கூண்டிற்கு அதிக பட்ச தொகையாக ரூ.5 இலட்சமும், அதில் பெண்கள் மற்றும் பட்டியலினத்தவருக்கு 60 சதவீத மானியமும் (ரூ.3 லட்சம்), ஆண்கள் மற்றும் பொதுபிரிவினருக்கும் 40 சதவீத மானியமும் (ரூ.2 லட்சம்) மத்திய அரசிடமிருந்து நிதி உதவியாக பெறலாம்.
- தனி நபராக அதிக பட்சம் ஐந்து கூண்டுகளுக்கு மானிய உதவியும் / குழுவாக அதிக பட்சம் 50 கூண்டுகளுக்கு மானிய உதவியும் பெறலாம்.
- மேற்கண்ட அனைத்து திட்டங்களுக்குமான நிதியுதவி, பொதுப்பிரிவினர் மற்றும் ஆண்களுக்கு 40 சதவீத மானியமும், பெண்கள் / ஆதி திராவிடர் / பழங்குடியினர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு 60 சதவீத மானியமும் மத்திய அரசின் மூலம் வழங்கப்படும்.
- திட்டம் சார்ந்த நிதியுதவி விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட தமிழ்நாடு மீன்வளத்துறை அலுவலகத்தை அணுகவும்.
- திட்டம் சார்ந்த தொழில்நுட்ப விபரங்களுக்கு மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் மண்டபம் அலுவலகத்தை அணுகவும்.

**தயாரிப்பு :** மு. சங்கர், ரெ. ஜெயக்குமார், கோ. தமிழ்மணி, மு. சக்திவேல், பா. இரமேஷ்குமார், பி. ஜான்சன், கே.கே. அனிக்குட்டன், ஏ.கே. அப்துல் நாசர்

**வெளியீடு** இயக்குனர், இ.வே.ஆ.க. மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், கொச்சி, கேரளா
CMFRI Pamphlet No. 95/2021